# யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளியுறவுக் கொள்கை: புதிய பரிணாமமும் அது எதிர்கொள்ளும் சவால்களும்

எம்.ஐ.எம். இர்பான்

**அறிமுகம்:**

உலக நாடுகளின் இயக்கத்திற்கு பிரதான பங்காளியாக வெளிநாட்டுக் கொள்கை அமைகின்றது. ஒரு நாடானது அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரம் போன்ற பல்வேறு தேவைகளின் அடிப்படையில் வெளிஉறவுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனூடாகவே நாட்டினுடைய தேசிய நலனை அடையக் கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. மூன்று தசாப்த காலமாக சர்வதேசத்தின் பார்வையில் இனமுரண்பாடு புரையோடிப்போயுள்ள நாடாக இலங்கை விமர்சிக்கப்பட்டது. இலங்கையின் யுத்தமானது பிரித்தானியரின் காலனித்துவத்திலிருந்து கொண்டுவரப்பட்ட விஷேட சட்டங்கள், நிறுவப்பட்ட ஒப்பந்தங்கள் செயற்படாமை, மற்றும் ஏமாற்றங்கள் போன்ற காரணங்களால் யுத்தம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இதற்குத் தீர்வாக பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை சரியான தீர்வினை கொடுக்காததை அடுத்து இனமுரண்பாடு அல்லது யுத்தம் வளர்ச்சியடைந்தது எனலாம்.

2009.மே.18ம் திகதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. இந்த வெற்றிக்காக இலங்கை அரசாங்கத்தோடு சர்வதேச நாடுகள் துணை நின்றன. யுத்த முடிவுக்குப் பின்னர் இலங்கையில் பல்வேறு முன்னேற்றகரமான அபிவிருத்திகளும் சமாதான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் இலங்கை பாரிய சவாலை எதிர்நோக்குவதோடு யுத்தத்திலிருந்து விடுபட்ட மக்கள் இன்னும் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர் இதற்கமைவாக இலங்கையின் யுத்த வெற்றிக்கும் அதனைத் தொடர்ந்த அபிவிருத்திற்கும் மற்றும் படிப்படியான வளர்ச்சிற்கும் வெளியுறவுக் கொள்கையின் புதிய பரிணாமமே பிரதான காரணியாகும். இவ்வகையில் யுத்த காலத்திலும் யுத்தத்திற்குப் பின்னரான காலத்திலும் வெளிநாடுகளுடன் காணப்பட்ட உறவின் நிலை, யுத்தத்தின் பின்பு இலங்கையின் வெளியுறவின் நிலை, யுத்தத்திற்குப் பின்னரான *அபிவிருத்திச் செயற்பாடு, மற்றும் தற்போது இலங்கை எதிர்நோக்குகின்ற சவால்கள்* போன்ற தொனிப்பொருள்களினூடாக இவ்வாய்வு ஆராயப்படுகின்றது.

**இலங்கையில் யுத்தம்:**

*மூன்று தசாப்த காலமாக சர்வதேச* மட்டத்தில் இனமுரண்பாடு புரையோடிப்போயுள்ள நாடாக இலங்கை நோக்கப்பட்டது. இலங்கையின் யுத்தக் காரணியை அடையாளப் படுத்தும் போது ஆரம்ப காலம் தொட்டு யுத்தத்திற்கான அல்லது முரண்பாட்டிற்கான விதைகள் நடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டலாம். ஆரம்பத்தில் எல்லாளன் துட்டகைமுனுவின் வரலாற்றுக் காலம் தொட்டு கூறப்படுகின்ற காரணங்களை அடிப்படையாய் வைத்து நாம் யுத்தக் காரணியை அடையாளப்படுத்த முடியும். எனினும் இலங்கையின் யுத்தத்திற்கான ஆரம்ப தீவிரமான செயற்பாடாக பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரம் விளங்குகிறது. அவர்கள் அறிமுகப்படுத்திய இனவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை இலங்கையில் காணப்பட்ட இனங்கள் மத்தியில் இலங்கையர் என்ற உணர்வைத் தூண்டவில்லை.

1918இல் 2ஆம் யாப்புச் சீர்திருத்த மாநாட்டில் தமிழ் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட பிரதிநிதித்துவக் கோரிக்கையை தேசிய காங்கிரஸ் செவிமடுக்காத போது ஏற்பட்ட பிளவானது 1921இல் 'தமிழர் மகா சபை' என்ற இயக்கத்தை தோற்றுவித்தது. அன்றைய தமிழர்களின் கோரிக்கை மறுக்கப்பட்ட நிலைதான் அவர்கள் தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை முன்வைக்க பிரதான காரணியாய் அமைந்தது.

அதுமட்டுமன்றி சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் பெரும்பாண்மை சிங்களவர்களால் சிறுபாண்மை சமூகங்கள் புறக்கணிக்கப் பட்டமை, 1948 – பிரஜாவுரிமைச் சட்டம், 1956 – தனிச் சிங்களச் சட்டம், 1971 – கல்வி தரப்படுத்தல் முறை, 1983 – ஜுலைக் கலவரம், தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற திருகோணமலை, அம்பாரை, மட்டக்களப்பு, மன்னார் போன்ற இடங்களில் சிங்கள மக்களின் திட்டமிட்ட குடியேற்றங்கள் மற்றும் அதற்குப் பின்னர் இலங்கையில் அதிகாரத்தை பகிர்வதற்காக முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்கள் சீரான முறையில் அமுல்படுத்தப்படாமை போன்றன இலங்கையில் யுத்தம் தோன்றுவதற்கான காரணமாய் அமைந்தன.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வகையில், 1926 – SWRD பண்டாரநாயக்காவின் உரை, 1927 – மலைநாட்டுச் சிங்களத் தலைவர்களின் சமஷ்டிக் கோரிக்கை, 1957 – பண்டா – செல்வா ஒப்பந்தம், 1964 – சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம், 1965 – டட்லி – செல்வா ஒப்பந்தம், 1983 – வட்ட மேசை மாநாடு, 1984 – சர்வ கட்சி மாநாடு, 1985 – திம்புப் பேச்சுவார்த்தை, 1987 – இலங்கை – இந்திய ஒப்பந்தம், 1995 – மோதல் தடுப்பு ஒப்பந்தம், 2002 – யுத்த நிறுத்த உடன்படிக்கை, 2002 – ஒஸ்லோ பிரகடனம், 2003 – டோக்கியோ பிரகடனம், 2005 – இடைக்கால தன்னாட்சி அதிகார சபை, 2006 – ஜெனிவா அறிக்கை போன்ற இவ்வாறான பல்வேறான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இருப்பினும் இம்முயற்சிகள் வெற்றியளிக்க வில்லை. அத்தோடு இம்முயற்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் மீறப்பட்டமையும் முரண்பாடு தீவிரமாக வளரக் காரணமாய் அமைந்தது எனலாம்.

2005.11.18அன்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ சமாதானத்தை மேற்கொள்வதற்கு பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டார் அவை வெற்றியளிக்க வில்லை. இதன் பின்னர் LTTEயினருக்கு எதிராக இலங்கை அரசாங்கம் யுத்தத்தில் ஈடுபட்டது. இதனையிட்டு 2009.05.18ஆம் திகதியிலிருந்து யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. இதன் விளைவாகவே இன்று மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் வடபுல மக்கள் தத்தம் கலாசார நிகழ்வுகளிலும் திருவிழாக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இங்கு அச்ச உணர்வுடன் வாழ்ந்த மக்கள் தமது தேவைகளையும் கடமைகளையும் நாடு பூராகவும் சுதந்திரமான முறையில் மேற்கொள்கின்றனர்.

அத்தோடு அண்மையில் இடம்பெற்ற தேர்தலும் அதற்கான பிரச்சார நடவடிக்கைகளும் சர்வதேச சமாதானத்தின் வெளிப்பாடாக அமைகின்றன. எவ்வாறிருப்பினும் யுத்தத்திற்குப் பின் பல சமாதான அபிவிருத்திச் செயற்பாடுகளை இலங்கை அரசு மேற்கொண்டாலும் மக்களின் உயிர்கள், உடமைகள் பறிக்கப்பட்டு மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்பான சர்ச்சைகள் இன்னும் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற சமாதான நிகழ்வுகள் ஒரு மாயைகளே என விமர்சிக்கப்படுகின்றது. இதன் பிரகாரமே இன்னும் நிரந்தர சமாதானத்தை எட்டாத இலங்கைக்கு மிக விரைவில் நிரந்தர சமாதானத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்பையில் அரசியல் விமர்சகர்களும், அரசியல் கட்சிகளும் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாடுகள் போன்றன பல்வேறு தீர்வுத் திட்டங்களை இலங்கை அரசுக்குத் தெரிவிக்கின்றன – தெரிவித்து வருகின்றன.

எவ்வாறிருப்பினும் மூன்று தசாப்த கால யுத்தம் 2009.05.18அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது இலங்கை வரலாற்றில் ஓர் திருப்புமுனையாகும். இலங்கையின் யுத்த வெற்றியானது இன்று சர்வதேச அரங்கில் ஓர் எடுத்துக் காட்டாகவும் அமைந்துள்ளது. யுத்த வெற்றிக்குப் பின்னர் பல்வேறு அரசியல் மாற்றங்களை நோக்கிச் செல்கின்ற நாடாக இலங்கை மிளிர்கிறது என்றால் மிகையாகாது.

ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையானது அந் நாட்டின் தேசிய நலனை பாதுகாப்பதாக அமைய வேண்டும். அவ்வாறே நாட்டின் கால சூழ்நிலைக்கேற்ப வெளிநாட்டுக் கொள்கையின் தன்மை மாற்றத்திற்கு உட்படும். இலங்கையை பொறுத்த மட்டில் ஆட்சி மாற்றங்களினாலும் ஆளப்படுவோரின் கொள்கைகளின் அடிப்படையிலும் மாறுபட்டு வந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி (UNP) சார்பானவர்கள் ஆட்சிக்கு வரும் போது மேற்கத்தேயம் சார்பாகவும் இலங்கை சுதந்திரக் கட்சி (SLFP) சார்ந்தவர்கள் ஆட்சிக்கு வரும்போது மேற்கத்தேயம் தவிர்ந்த ஏனைய அணிசேராமையில் உறுதித் தன்மை, கமியுனிஸச் சார்பு மற்றும் ஆசிய ஆபிரிக்க நாடுகளுடன் நெருக்கமான உறவினை பேணி வந்துள்ளமை – வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனடிப்படையில் 2004 ஏப்பிரலில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வெற்றி பெற்றதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்தில் அவர் 2004 ஏப்பிரல் 06ஆம் திகதியன்று நாட்டின் 13ஆவது பிரதமராகத் மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார். பின்னர் உயர் நீதிமன்ற உத்தரவொன்றினால் 2005 நவம்பரில் ஒரு வருடகாலத்துக்கு முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது கட்சியின் அப்போதைய சிரேஷ்ட உபதலைவரான மஹிந்த ராஜபக்ஷ 2005 நவம்பர் 17இல் நடைபெற்ற தேர்தலுக்கான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டு, 'தேர்தலில் வெற்றி' பெற்று இன்று வரை நாட்டின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக கடமையாற்றுகின்றார். மஹிந்த ராஜபக்ச அதிகாரத்திற்கு வந்தவுடன் அவரின் வெளியுறவுக் கொள்கை மாற்றமான புதிய பரிணாம

நிலையில் அமைந்து காணப்பட்டது – காணப்பட்டு வருகின்றது. அதாவது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியை ஏற்படுத்துவதை கருப் பொருளாகக் கொண்டு அமையப் பெற்றுள்ளது.

**யுத்த காலத்திலும் யுத்த வெற்றிக்குப் பின்னரான காலத்திலும் காணப்பட்ட வெளிநாட்டு உறவுகள்:**

இலங்கையின் வெளியுறவுக் கொள்கைச் செயற்பாட்டில் காலத்திற்கேற்ப மாறுபட்ட கொள்கைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற காலத்தில் காணப்பட்ட வெளிநாடுகளினுடனான உறவானது சர்வதேச அளவில் பேசப்படுகின்ற ஒரு விடயமாக அமைந்திருந்தது. இச்செயற்பாடுகளே யுத்த வெற்றிக்கும் உதவியாக அமைந்திருந்தது. பொதுவாகக் கூறும் போது மேற்கத்தேயம் தவிர்ந்த ஏனைய நாடுகளுடன் நெருக்கமான, வெற்றிகரமான உறவுகள் மேற் கொள்ளப்பட்டது. இந்த அடிப்படையில் இலங்கையின் யுத்த வெற்றிக்கு யுத்தகால ஆரம்ப காலத்தில் உதவிய நாடுகளின் செயற்பாடுகளை பின்வருமாறு ஆதாரப்படுத்த முடியும்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் அவரது பாரியாரும் 2009.03.02அன்று நேபாளத்திற்கு விஜயம் மேற்கொண்டனர். இவர்களை காத்மண்டு விமான நிலையத்தில் நேபாள வெளிவிவகார அமைச்சர் உபேந்திராயாதவ் வரவேற்றார். காத்மண்டுவிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றதோடு அந்நாட்டு பிரதமர் பிரசன்னாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. நேபாளம் குடியரசானதன் பின்பு சென்ற முதலாவது அரச தலைவர் இலங்கை ஜனாதிபதியாகும். இங்கு பிரதானமாக கொழும்பு – காத்மண்டு நேரடி விமான சேவையை மீளஆரம்பித்தல், கல்வி, கலாச்சார, விவசாயத் துறைக்கான கூட்டு ஆணைக்குழுக்களை நியமித்தல் போன்ற உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இலங்கையின் பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி போன்ற விடயங்களில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதே போன்று 2008.10.09அன்று இலங்கைக்கு விஜயம் தந்திருந்த பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூட் அப்பாஸின் வருகையானது வெளியுறவுக் கொள்கையில் பிரதான இடத்தை வகிக்கிறது. இவர் இலங்கையுடன் அரசியல் தொழிநுட்பத் துறைகளில் பிணைப்பினை வலுப்படுத்தும் நோக்குடன் இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்களைச் சந்தித்து தொழிநுட்ப ஒத்துழைப்புப் பயிற்சி தொடர்பான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2009.01.13அன்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம அவுஸ்ரேலியா விஜயம் செய்தார். இவர் கூறும் போது, அவுஸ்ரேலியாவில் 5000க்கு மேற்பட்ட இலங்கையர்கள் கல்வி பயில்கின்றார்கள் என்பதோடு சட்டவிரோதமான குடிவரவு, பயங்கரவாத நடவடிக்கை என்பது குறித்து இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடாத்தியதோடு இலங்கையின் ஆரம்பப் பள்ளி நடவடிக்கைகளுக்கு 6மில்லியன் நிதியுதவியையும் வழங்கியது என்றார்.

இலங்கையின் யுத்த வெற்றிக்கு பாகிஸ்தானுடனான உறவு பிரதான இடத்தை வகிக்கின்றது. இந்த வகையில் யுத்த காலத்தில் பல புதிய ஆயுதங்களையும் பயிற்சிகளையும் இலங்கைக்கு வழங்கியது. யுத்த காலத்தில் உலக நாடுகளை அதிர்ச்சிக்குட்படுத்திய விமானப்படைகளையும் விமானத்தையும் (கிபீர்)வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான தொடர்பும் ஆரம்பம் முதல் இன்றுவரை சுமுகமான நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1985 – 1986 காலப்பகுதியில் 30 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கியது. அதுமட்டுமல்லாது புலிகளைத் தோற்கடிப்பதற்காக பிரிட்டிஸ் ஆயுதங்களை விற்பனை செய்ததென பிரிட்டிஸ் டைம்ஸ் பத்திரிகை தகவல்களை வெளியிட்டிருக்கின்றது. அவ்வகையில், வர்த்தக ரீதியிலான விற்பனை அடிப்படையில் 13.6 மில்லியன் பவுன்கள் பெறுமதியான கவச வாகனம், மெசின்கன், தன்னியக்கப் பிஸ்டோல் போன்ற பல ஆயுதங்களை விற்பனை செய்தது. சுலோவாக்கியா 9.1மில்லியன் பவுன் பெறுமதி வாய்ந்த 10000ரொக்கட்களையும் கவச வாகனம், மெசின்கன், தன்னியக்கப் பிஸ்டோல் போன்ற பல ஆயுதங்களை விற்பனை செய்தது. பிரித்தானியாவானது,

2006இல் 8.6 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களையும், 2007இல் 4 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களையும், 2008இல் 4 மில்லியன் டொலர் பெறுமதியான

ஆயுதங்களையும் வழங்கியது *(பிரிட்டிஸ் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்ததாக மெட்ரோ நியுஸ் பத்திரிகையில் 2009.06.03இல் வரப்பட்ட செய்தி).*

அத்தோடு கொரியாக் குடியரசின் தேசிய சபை உறுப்பினர் Dr. ஆங்கொங்யூன் தலைமையில் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு வந்து பல உடன்பாடுகளை மேற்கொண்டது. அண்மையில் இலங்கையில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் இலங்கை தொடர்பாக பயங்கரவாதத்திற்கு உதவ வேண்டும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் வேண்டிக் கொண்டார்.

*சீனாவானது* ஆரம்பகால வெளியுறவிலிருந்து இன்று வரையும் இலங்கையுடன் மிக நெருக்கமான உறவு காணப்படுகின்றது. அவ்வகையில் யுத்த காலத்தில் *சீனாவுடனான* உறவினை நோக்கும் போது *சீனாவின்* முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய விரும்புகின்றார்கள் என்பதோடு 46 நிறுவனங்கள் பொதுச்சட்ட திட்டங்களுக்கேற்ப வர்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

மேலும் *சீனாவானது* இலங்கைக்கு அரசியல் *ரீதியான* பல ஆதரவுகளையும் இராணுவ உதவிகளையும் வழங்கியது அவ்வகையில் 1970களில் ரோந்துப்படைகளையும் ஆயுதங்களையும் வழங்கியதுடன் விமானப் படைகளுக்கான பயிற்சிகளையும் வழங்கியது. 1979 – 1983 வரையான காலப்பகுதியில் இலங்கை *சீனாவிடமிருந்து* 5மில்லியன் அமெரிக்க டொலர் பெருமதியான ஆயதங்களை கொள்வனவு செய்தது.

2009.04.08அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச லிபியாவுக்கு விஜயம் மேற்கொண்டு Dr. அல்பக்தாதி அலி மஹ்முடியுடன் அபிவிருத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 2009.01.02அன்று இலங்கைக்கு மாலைதீவு ஜனாதிபதி முஹம்மது சுன்னி நஜீத் ஜனாதிபதியைச் சந்தித்து இலங்கையின் அபிவிருத்திற்கான பல உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2008.12.03அன்று இலங்கை ஜனாதிபதி துருக்கிற்கு விஜயம் மேற்கொண்டு இலங்கையின் யுத்தத்திற்கான பொருளாதார உதவியை பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான உயர்தர உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு இலங்கைக்கு பல உதவிகளை ஈரான் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. மேலும் நாடு முழுவதும் இலங்கை ஜனாதிபதியும் ஈரான் ஜனாதிபதியும் இணைந்த உருவப்படங்கள் சுவரொட்டிகளில் பொறிக்கப்பட்டு காணப்பட்டமையானது ஈரானுடன் நல்லுறவைப் பேணுவதை எடுத்துக் காட்டுகிறது.

மேலும் இந்தியாவானது அணிசேராக் கொள்கைத் திட்டத்தின் விளைவாகவும் கலாச்சார ஒருமைப்பாட்டின் விளைவாகவும் யுத்த காலத்தில் பல நல்லுறவுகள் பேணப்பட்டன. மேற்கண்டதற்கமைவாக மேற்குலகம் தவிர்ந்த ஏனைய நாடுகள் ஏதோவொரு வகையில் இலங்கையின் யுத்த காலத்தில் உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

2009.05.18 அன்று இலங்கையின் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதென அறிவிக்கப்பட்டது. இக்காலத்தின் பிற்பாடு இன்று வரையும் உலக நாடுகள் இலங்கையுடன் வெளியுறவுகளை மேற்கொள்வதற்காக போட்டி போட்டுக் கொண்டிருப்பதையும், பல்வேறு விதமான பொருளாதார உதவிகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக மஹிந்த ராஜபக்ஷவின் வெளியுறவுகள் தந்திரோபாயமானதாக அமைந்தன. இன்று பல நாடுகள் உறவுகளை மேற்கொள்கின்றது. யுத்த காலத்தில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உட்பட பல முக்கியஸ்தர்கள் பல்வேறான உடன்படிக்கைகளை ஏனைய உலக நாடுகளுடன் மேற்கொண்டனர். இந்த செயற்பாடுகளோ இன்று பல நாடுகள் ஆதரவு தெரிவிப்பதற்கு காரணமாகும். அந்த வகையில் பின்வரும் நாடுகளின் ஆதரவுகளையும் உறவுகளையும் ஆதாரப்படுத்த முடியும்.

யுத்த முடிவுக் காலத்திலுள்ள பிரதான வெளியுறவு ஜனாதிபதியின் ஜோர்தான் விஜயமாகும். ஜனாதிபதியானவர் ஜோர்தானில் பேசிய முறை அங்குள்ள இலங்கை மக்கள் மீது ஆற்றிய உரை, மற்றும் மீண்டும் இலங்கை வந்து மண்ணை முத்தமிட்டவை வெளியுறவின் பல்வேறான செல்வாக்கினை செலுத்தியது. ஜோர்தானில் ஜி—11 மகாநாட்டில் கலந்து கொண்ட நாட்டு பிரமுகர்கள் ஜனாதிபதியின் உரையின் போது தத்தம் மொழிகளில் வாழ்த்துக்களை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அல்லாஹு அக்பர், சிந்தாபாத், ஜெயவேவா) இந்த வாழ்த்துக்கள் இலங்கையின் யுத்த வெற்றிக்கு ஆதரவளித்ததாகவே காணப்பட்டது. இங்கு பிரதான விடயம் என்னவெனில் ஜி-11 இல் கலந்து கொண்ட 11 நாடுகளினதும் ஆதரவுகளையும், உதவிகளையும் பெற்றமையாகும். அவ்வகையில் ஜோர்தான்,

மொரோக்கோ, குரோசியா, கொன்ராஸ், பாகிஸ்தான், டியுனிஸ்யா, ஜோர்ஜியா, பரகுவே, எஸ்சல்வடோர், இந்துனேசியா போன்ற நாடுகளை குறிப்பிட முடியும்.

யுத்தத்திற்குப் பின்பு வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன்புரி விடயங்களை மேற்கொள்வதற்கான மியன்மார் அரசாங்கம் 50 ஆயிரம் டொலர்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இரு நாடுகளிலும் (இலங்கை – மியன்மார்) 60 வருட கால இராஜதந்திர உதவியினை மேலும் துரிதப்படுத்தியது. அந்தவகையில் 1950களில் செய்து கொள்ளப்பட்ட இரு நாடுகளுக்குமிடையிலான விமான சேவைகளை தற்கால நிலைக்கேற்ப திருத்துவதற்கு முடிவு மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் உல்லாசப் பயணத்துறை, விசாத்தளர்வு போன்ற உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே பயங்கரவாதத்திற்கு எதிரான மியன்மார் பாராட்டினை தெரிவித்தமையானதும் இலங்கையின் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திக்காக வெளி உறவுகளின் பங்களிப்புக்கள் அதிகரிக்கப்படுவதாக அமைகிறது.

ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையின் மனித உரிமை மீறல் தொடர்பான பேரவையில் வெளிப்படையாக இலங்கைக்கு மலேசியா ஆதரவான கருத்துக்களை தெரிவித்துள்ளது. அவ்வகையில் ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாத மலேசியாவானது, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தெரிவிக்கும் போது, இலங்கை தொடர்பான உள் விடயங்களில் வேறு நாடுகளையோ அல்லது UNOவோ தலையிட முடியாது என்றார். இக்கருத்தானது இலங்கை தொடர்பான நல்லுறவினைப் பேணுவதோடு பல உதவிகளையும் அபிவிருத்திகளையும் பெறுவதற்கான உறவு முறையாக அமைகின்றது.

யுத்தத்தின் பின்பு இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குமிடையில் ஒரு கூட்டு ஆணைக்குழு கொண்டுவரப்பட்டது. அத்தோடு ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் மின் உதவி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இலங்கையில் வெளியுறவுக் கொள்கை தொடக்கக் காலம் முதல் இன்று வரை மிகவும் பிரதான பங்கினை அல்லது முதன்மையான இடத்தை *சீனா* பெற்றுள்ளது – பெற்று வருகின்றது. அவ்வகையில் அரிசி – இறப்பர் ஒப்பந்தம் தொடக்கம் பல்வேறு விதமான உடன்படிக்கைகளையும் உதவிகளையும் இலங்கை *அரசின்* தேசிய நலனுக்காக வழங்கப்படுகின்றமையும் நோக்கத்தக்கது. இலங்கையின் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திற்கு பிரதான பங்காளியாக *சீனாவு*டனான நெருக்கமான உறவு காணப்பட்டு வருகின்றது. இன்றைய இலங்கையின் அபிவிருத்திற்காக பிரதான முகவராக *சீன* தொழிற்படுகின்றது. இதனை இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு உதவித் திட்டங்கள், ஒப்பந்தங்கள் போன்றவற்றினூடாக அறிந்து கொள்ள முடியும். அவ்வகையில் இலங்கைக்கும் *சீனா*வுக்குமிடையிலான உறவுகளை பின்வருமாறு நோக்கமுடியும்.

2009.05.26 அன்று இலங்கை விவகாரம் தொடர்பான UNOவின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வானது நடைபெறுவதையடுத்து இலங்கைக்கு *சீனா* ஆதரவினைத் தெரிவித்தது. இதனையிட்டு இலங்கை அரசாங்கம் *சீனா*வுக்கு நன்றிகளைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் பிரதானமாக *சீனா* தற்போது இலங்கையின் முக்கிய நகர அபிவிருத்திக்கு உதவிகளை வழங்குகின்றது. அவ்வகையில்,

- அம்பாந்தோட்டையில் 360 மில்லியன் டொலர் பாரிய துறைமுகத்தை அமைப்பதற்காக வழங்குகின்றது.
- பாணந்துறை துறைமுகத்திற்காக 5.7 மில்லியன் டொலர் உதவி.
- அம்பாந்தோட்டை களஞ்சியத் திட்டத்தின் நகரமயமாக்கல் செயற்காடுகளிற்கு 76.6 மில்லியன் டொலர் உதவி.
- நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கு 455 மில்லியன் டொலர் உதவி. மேலும் இத்திட்டத்திற்கு 2ம், 3ம் கட்டங்களுக்கான செலவு 400 மில்லியன் டொலர்களாகும்.
- கொழும்பு கட்டுநாயக்க வீதி புனரமைப்பிற்கு 248.2 மில்லியன் டொலர் உதவி.
- சிறிய வீதித் திட்டங்களுக்கு 110 மில்லியன் டொலர் உதவி.
- இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு 38.5 மில்ல்லியன் டொலர் செலவில் டீசல் இன்சினுக்கு 27 மில்லியன் டொலர் செலவில் புகையிரதப் பெட்டிகள் வழங்குகின்றது.
- பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தினை தரமுயர்த்த 7.2 மில்லியன் டொலர் உதவி.
- நீதி மன்றத் தொகுதிகளின் நிர்மாணத்திற்கு 22 மில்லியன் டொலர் உதவி.

- ❖ வீடமைப்புத் திட்டம், கிராமிய மின் விநியோகத் திட்டம் போன்றவற்றிற்கு 45 மில்லியன் டொலர் உதவி.
(தினக்குரல் – 2009.07.15 பக்கம்: 02)

மேலும் 2010 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் 30ஆம் திகதி வரைக்குமான வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகளில் சீனாவானது பின்வரும் உதவிகளை வழங்கியது.

- ❖ மாத்தளை – ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலைய கருத்திட்டம் – 190,785,771 US$
- ❖ இலங்கை புகையிரதத்திற்கான 13டீசல் இயந்திரங்களை வழங்கல் கருத்திட்டம் – 102,730,800 US$
- ❖ எம்ஏ – 60 விமானங்கள் இரண்டினை வழங்குதல் – 41,114,296 US$
- ❖ வட மாகாண மின் உற்பத்தித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மூலப்பொருட்கள் கொள்வனவு – 31,659,392 US$
- ❖ வடக்கு பாதை புனரமைப்புக் கருத்திட்டம் – ஏ9 – 71,021,514 US$
- ❖ வடக்குப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம் – ஒப்பந்தம் 11ஏ – 42,777,300 US$
- ❖ வடக்குப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம் – ஒப்பந்தம் 11பி – 42,509,700 US$
- ❖ வடக்குப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம் – (ஏபி 20), (ஏபி 32), (ஏபி 16) மற்றும் (ஏபி 18) – 75,420,000 US$
- ❖ வடக்குப் பாதை புனரமைப்புக கருத்திட்டம் – ஏ9 (230கி.மீ. யாழ்ப்பாணம் வரை) – 70,583,452 US$

மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

மேலும் சீனாவில் பீஜிங் நகரில் அமைந்துள்ள வெளிநாட்டு மொழிக்கற்கை பல்கலைக் கழகத்தினால் அப்பல்கலைக் கழகத்தின் வேந்தர் பேராசிரியர் சென் யுலூவினால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அரசியல், பொருளாதார, வர்த்தக உறவுகள், கலாசார, சுற்றுலா மற்றும் கல்வி போன்ற துறைகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் அடையப்பெற்ற சாதகமான முன்னேற்றம் தொடர்பில் இலங்கையும் சீனாவும் திருப்தியை வெளியிட்டதோடு, நேர்மையான, பரஸ்பர ஆதரவு மற்றும் நிலையான, நட்புறவு தொடர்பான தமது அனைத்தையும் உள்ளிட்ட ஒத்துழைப்பை மேலும் முன்னெடுத்துச் செல்ல கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளவும் இருநாடுகளும் இணக்கம் தெரிவித்தன. பயங்கரவாத சக்திகளுக்கு எதிராக நாட்டின் இறைமை, தேசிய ஐக்கியம், மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாப்பதற்கு இலங்கை எடுத்துவரும் முயற்சிகளில் சீனா அதன் உறுதியான ஆதரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ரஷ்யாவினைப் பொறுத்தமட்டில் ரஷ்ய ஜனாதிபதியின் அழைப்பினை ஏற்று மஹிந்த ராஜபக்ஷவின் ரஷ்ய விஜயத்தின் போது இலங்கையினுடைய எதிர்கால நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ் உறுதியளித்துள்ளார். பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மிக வேகமாக கட்டியெழுப்பப் படும் இலங்கையின் எதிர் கால அபிவிருத்திற்கு 300 மில்லியன் டொலர் நிதியை கடனுதவியாக வழங்கத் தீர்மானித்தது. மேலும் இரு நாடுகளுக்குமிடையில் ஊடகத்துறை சார் நவீன தொழிநுட்பங்களை பரிமாறிக் கொள்வது தொடர்பில் விஷேட ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டது. மேலும் உலக சமாதானத்திற்காக மேற்கொண்ட சேவைகள், பயங்கவைாதத்தை ஒழித்து கல்வி, கலாசாரம் உட்பட பல்வேறு துறைகளின் மேம்பாட்டிற்காக முன்னெடுத்த பாரிய சேவைகளுக்காக ரஷ்ய நாட்டு நட்புறவுப் பல்கலைக் கழகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிக்கு கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது. மேலும் உலகிற்கு சமாதானத்தைப் பெற்றுக் கொடுத்த ரஷ்ய அரச பரம்பரையை நினைவு கூறும் வகையில் அதன் ஞாபகார்த்தமாக தங்கத்தினாலான மாணிக்கக் கற்கள் பதிக்கப் பட்ட கிரீடமொன்றை ரஷ்ய நாட்டு நட்புறவுப் பல்கலைக் கழகம் வழங்கி கௌரவித்தது.

2005இலிருந்து ஆட்சிப் பொறுப்பேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அணிசேராக் கொள்கைக்கு அமைய சகல நாடுகளுடன் நட்புறவைப் பேணி வந்தார். இவ்வகையில் இந்தியாவினைப் பொறுத்த மட்டில் இலங்கைக்கு எதிராக தமிழக அரசின் எதிர்ப்பு தலைதூக்கினாலும் கூட பல உதவிகளை வழங்கி வருகின்றது. அவ்வகையில் மீன்பிடி உபகரணங்கள், பாடசாலைகளுக்கான கணனி உபகரணங்கள், மஹாத்மா காந்தி புலமைப் பரிசில் திட்டம், கொழும்பு புற்று நோய் வைத்தியசாலைக்காக 7.5மில்லியன் அமெரிக்க

டொலர் அன்பளிப்பு, மருந்து வகைகள் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. மேலும் யுத்த காலத்தில் 6300தொன் எடையுடைய தகரக் கூடாரங்கள், 60பேர் கொண்ட மருத்துவக் குழு, உலர் உணவுகள் வழங்கியமை, வடக்கில் வீதிப் புனரமைப்பிற்கு 425மில்லியன் கடனுதவி வழங்கியது.

இதனடிப்படையில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை வரலாற்றில் 2005ம் ஆண்டிற்குப் பின்னரான அதாவது யுத்த கால மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியிலான செயற்பாடானது ஒரு தனித்தன்மை வாய்ந்ததாகவும் உலக நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் அமைந்திருந்தது. பொதுவாக இக்காலப்பகுதியில் அணிசேராக் கொள்கையில் உறுதித்தன்மை, கொமினியுச நாடுகளுடனான நெருக்கமான உறவு, மத்திய கிழக்கு நாடுகளுடக் நெருக்கமான உறவு பேணப்பட்டது. மற்றும் இவற்றிக்கு மாற்றமாக மேற்கத்தேய நாடுகளுடன் கசப்புணர்வுடனான உறவினையே கொண்டிருந்தது. இவற்றுள் பொதுவாக *சீனா* மற்றும் ஈரான் போன்ற நாடுகளுடன் மிக நெருக்கமான உறவு பேணப்பட்டது. இந்நாடுகளே இலங்கையினுடைய யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியின் பங்குதாரர்களாகக் காணப்பட்டு வருகின்றனர். *சீனா*தான் இப்போது இலங்கையின் நம்பிக்கைக்குரிய பாதுகாவலனாகக் கருதப்படுகின்றது.

**எதிர்நோக்கும் சவால்கள்:**

உலகலாவிய *ரீ*தியில் நாடுகளுக்குள்ளேயோ, நாட்டிற்கு வெளியேயோ யுத்தம் அல்லது மோதல் இடம்பெறுவது மறுக்க முடியாத உண்மையாகும். இந்த வகையிலே இலங்கையில் கடந்த 3 தசாப்த காலமாக இடம் பெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவற்றை மீளமைத்து அபிவிருத்தி செய்வது அரசின் கடமையாகும் அவ்வகையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் வாழ்கின்றவர்களை மீளக்கட்டியெழுப்பும் முகமாக யுத்த காலத்தில் கைது செய்யப்பட்டோரை விடுதலை செய்தல், பழைய போராளிகளை சமூக பொருளாதார செயற்பாட்டில் மீளமும் இணைத்தல், இடம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளைக் கையாள்தல், அரசாங்க முறையினை மீளமைத்தல், வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளல், புனர்நிர்மானங்களை மேற்கொள்ளல் போன்றன பாதிக்கப்பட்ட மக்கள் எதிர் கொள்கின்ற சவால்களாக அமைகின்றன.

எவ்வாறிருப்பினும் யுத்தத்திற்குப் பின்னர் பல்வேறுவிதமான அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட இலங்கையானது இன்னும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. முழுமையான ஆயுதக்களைவு இன்மை, போராளிகளின் விடுதலையில் சீரின்மை, முகாம் வாழ்க்கை அகற்றப் படாமை. பொருளாதார *ரீ*தியில் (தொழில்)இணைப்பு இன்மை, மீள்குடியேற்றம் சீராக்கப்படாமை, கன்னி வெடிகள் அகற்றப்படாமை, உட்கட்டமைப்பு, *உள்ளூர் மட்ட அரசியல் விருத்தி, மக்கள் பங்குபற்றுதல் இன்மை, ஊடகச் சுதந்திரம்* பேணப்படாமை, சர்வதேச நிறுவனங்களின் எதிர்ப்பு, முரண்பாட்டுக் காரணங்களை கண்டறியாமை போன்ற பல்வேறு சவால்களை எதிர் கொள்கின்றது.

இதனடிப்படையில் இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டிற்காகவும் பொருளாதார அபிவிருத்திக்காகவும் பல்வேறு நாடுகள் ஆதரவினை வழங்கினாலும் கூட ஆரம்ப காலம் முதல் இன்று வரையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பல நாடுகளை தமது எதிர்ப்புக்களைக் காட்டியமை – காட்டிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக அந்நாடுகள் மேலைத்தேயம் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. இது பாரிய சவாலாகவும் மாறி வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த ஆரம்ப காலகட்டத்திலிருந்து இவருடைய வெளிநாட்டு உறவானது அணிசேராமையின் உறுதித்தன்மை காணப்பட்டதோடு கமியுனிசம் சார்ந்ததாகவும் மேற்குலகத்தின் மத்தியில் கசப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது. இந்த மேற்கத்தேய எதிர்ப்பானது இன்று வரை இலங்கை எதிர்நோக்கும் பிரதான சவாலாக மாறியுள்ளது. இதற்குச் சான்றாக ஆரம்ப ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை விட்டு வெளியேறியமை, ஈரான் - இலங்கை நெருக்கமான உறவு, இலங்கைக்கு ஆதரவு வழங்கிய இஸ்ரேல் பின்பு உதவிகளை வழங்காமை, UNO மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை தவிர்க்கப்பட்டமை, ஐக்கிய நாடுகளின் ஆடை ஏற்றுமதிக் கோட்டாவில் இலங்கையின் அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும் என்பதை பொருட்படுத்தாமை, ஜோர்தான், இந்தியா, பாகிஸ்தான், *சீனா* போன்ற நாடுகளுடன் நெருங்கிய விஜயம் போன்றன இதற்கு சான்றாக அமைகின்றது.

பிரித்தானியாவின் நிலைகளை எடுத்து நோக்கும் போது யுத்தத்திற்கு எதிராக செயற்பாடுகளை மேற்கொண்டது. அவ்வகையில் பிரிட்டிஸ் வெளிவிவகார அமைச்சர் மில்லிபான்ட் மற்றும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் குச்சர் இணையும் ஜனாதிபதி

சந்தித்து பேசிய போது அது தோல்விகண்டமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இலங்கை அரசுக்கு எதிராக பல வாதங்கள் முன்மொழியப்பட்டதோடு இலங்கை அரசுக்கு பல கண்டனங்களையும் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பிரித்தானியாவின் Oxford பல்கலைக் கழகம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பேசவிடாமல் தடுத்தமை, 2011.05.26 இடம்பெறவிருக்கும் இலங்கை இங்கிலாந்து கிரிக்கட் சுற்றுக்கு இலங்கை அணி இங்கிலாந்துக்கு வருவதை அங்குள்ள தமிழ் பிரஜைகள் எதிர்த்தமை மற்றும் புலம் பெயர் தமிழர்களின் போராட்டங்கள் போன்றவற்றை எடுத்துக்காட்ட முடியும். இலங்கையானது பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் அடைந்தவொரு நாடாகும். இவ்விரு நாடுகளுக்குமிடையில் பல்வேறு விதமான உறவுகள் காணப்பட்டு வந்தன. குறிப்பாக விக்டோரியா அணைக்கட்டு போன்ற பல்வேறு விதமான உதவிகளை இலங்கைக்கு வழங்கியது. இருப்பினும் இன்றைய இலங்கையின் வெளிநாட்டு உறவில் பிரித்தானியாவுடனான தொடர்பானது கேள்விக்குட்படுத்தப்பட்டதாக மாறிவருகின்றது.

நெதர்லாந்து அரசாங்கமானது இலங்கை அபிவிருத்தி உதவிகளை நிறுத்துமாறு கூறியது. அதாவது இலங்கை பாதுகாப்பு நிலவரத்தை கருத்திற்கொண்டு அபிவிருத்திக்கான நிதியுதவியினை வழங்குவதில்லையென நெதர்லாந்து தீர்மானித்தது. 1970 தொடக்கம் இலங்கைக்கு வருடாந்தம் 30 – 40 மில்லியன் யூரோக்களை இலங்கைக்கு வழங்கி வந்தது. இன்றைய நிலையில் இலங்கைக்கான உதவி முறையினை முடிவுக்குக் கொண்டு வருவதாக அந்நாட்டின் அபிவிருத்தித்துறை அமைச்சர் பேர்ட் கொலண்டல்ஸ் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. இது வெளிப்படையாகவே இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

அதே போன்று இஸ்ரேல் வெளிப்படையான எதிர்ப்பினை காட்டியது. அதாவது இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றதென்றும் இதனையிட்டு மனித உரிமை மீறல் தொடர்பான நடவடிக்கைகள் வாக்கெடுப்புக்கள் நாடுகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோரிக்கைகளை விடுத்தது. அத்தோடு USAவின் நிலையினை நோக்கும் போது தமிழர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வருமாறு இலங்கை அரசாங்கத்திடம் அமெரிக்கா கேட்டுக் கொண்டதோடு எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. மேலும் நியுயோர்க்கில் உள்ள வேன்ஸ் – ஒவென்ஸ் சமாதான அமைப்பின் பேச்சாளரும் சர்வதேச சட்ட நிபுணருமான பிரான்ஸிஸ் பொயெல் மஹிந்த ராஜபக்ஷவை தண்டனைக்குட்படுத்த வேண்டும் எனக்குறிப்பிட்டார் மேலும் அமெரிக்கா முழுவதும் இலங்கைக்கு எதிரான கோஷங்கள் அதிகரிக்கின்றமை நோக்கத் தக்கதாகும்.

மேலும் அண்மையில் (2008) கனடா நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த கனடா அமைச்சர்களை இலங்கை மண்ணில் கால்பதிக்கவிடாமல் மீண்டும் கனடாவுக்கு அனுப்பியதாவது இலங்கையின் வெளியுறவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவானது வெளியுறவில் சாதகமாக தொழிற்பட்டாலும் தமிழகத்தில் எதிர்க்கட்சியாக செயற்பட்ட ஜெயலலிதா அணியும் (தற்போது ஆளுங்கட்சி) அத்தோடு இணைந்த பல அமைப்புக்களும் போராட்டக் கோஷங்களை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் நாட்டுச் சட்டமன்றப் பேரவை, இந்திய மத்திய அரசை கேட்டுக் கொள்கிறது. மேலும் பல்லாயிரக்கணக்கான இலங்கை தமிழ் மக்களை சுட்டுக் கொள்கின்றவர்களை போர்க்குற்றவாளிகள் என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனப் படுத்த வேண்டும். என்று குறிப்பிட்டார்.

மேலும் தறுஸ்மன் அறிக்கை மற்றும் சனல் 4 விவகாரம், அவுஸ்ரேலியாவின் எதிர்ப்பு, கனடாவுடனான தொடர்ச்சியான எதிர்ப்பு, பெதுநலவாய நாடுகள் மாநாடு மற்றும் விளையாட்டுப் போட்டி 2013இல் இலங்கையில் நடைபெறுவதற்கு எதிராக கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டமை போன்றன தற்காலத்தில் இலங்கையின் அபிவிருத்திற்கு சவாலாக அமைகின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் அபிவிருத்திற்காக உலக நாடுகள் பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது. அவ்வாறே மேற்கத்தேய நாடுகளின் எதிர்ப்பும் வளர்ந்து வருகின்றது. சில மேற்கத்தேய நாடுகள் யுத்த காலத்தில் மறைமுகமான எதிர்ப்பைத் தெரிவித்தன. ஆனால் யுத்த முடிவுற்ற காலத்திலிருந்து இன்று வரை இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டுள்ளதென்றும் அதற்கெதிராக வழக்குத் தொடர வேண்டும் என்று கூறி மேற்கத்தேயம் மத்தியில் இலங்கையானது ஒரு குற்றவாளியாகக் கருதப்பட்டு வருகின்றது. பொதுவாக ஆசியப் பிராந்தியம் தவிர்ந்த முழு உலகமும் இலங்கையின் செயற்பாட்டிற்கு எதிர்ப்புக் கோசங்களையே தெரிவித்து வருகின்றது.

**இலங்கையின் எதிர்கால வெளியுறவுக் கொள்கை:**
மூன்று தசாப்த கால யுத்த வெற்றிக்குப் பின்பு இலங்கை யுத்தத்தால் இழந்த உடமைகளுக்கும், மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் பல்வேறு விதமான நிதியுதவியின் தேவைப்படுகின்றது. பிரதானமாக யுத்தத்தின் பின்பு இரண்டு விதமான தேவைகளை அடையாளம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1. இடம்பெயர்வு மக்களை பராமரித்தலும் அவர்களை மீள குடியேற்றுதலும்.
2. பொருளாதார சரிவிலிருந்து மீளுதல்.

அவ்வகையில் வவுனியாவின் இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களுக்கு ஒரு நாளைக்கு 11கோடி 30 இலட்சம் ரூபாய் தேவைப்படுகின்றதென்றும் மீள்குடியேற்றத்திற்குப் பல கோடி தேவை என்றும் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இவ்வாறு இலங்கையானது பல்வேறு பொருளாதார அபிவிருத்திகளை உலக நாடுகளில் வேண்டி நிற்கின்றது. இலங்கைக்கு பல நாடுகளின் உதவிகள் கிடைக்கப் பெறுகின்றமையானது எதிர்கால வெளியுறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வகையில் இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்தியா 500 கோடி ரூபாயினை தருவதாக தீர்மானித்துள்ளதோடு தமது நாட்டின் வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து நிதியினை வழங்குவதாகவும் அறிவித்துள்ளது. அத்தோடு ஜெனிவாவில் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பாக 11வது அமர்வில் இலங்கைக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பான பிரேரணைக்கு 29 வாக்குகளும் வெற்றி கண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சர்வதேச நாணய நிதியத்திட்டம் நிதி கோரும்போது அது 1.9 மில்லியன் டொலர்களை வழங்க இணங்கியது. இதனை அமெரிக்கா இடைநிறுத்தினாலும் கூட அமெரிக்க செனட் பிரதிநிதிகள் இதனை வழங்க வேண்டும் என வலியுறுத்தியது. சீனாவானது இலங்கைக்கு துறைமுகம், வீடமைப்பு, வீதி, மின்கட்டமைப்பு போன்றவற்றிற்குப் பல உதவிகளை வழங்கி வரும் அதேவேளை ஜி11, பொதுநலவாய நாடுகள், ஆசியப் பிராந்தியம், சார்க் அமைப்பு மற்றும் அரபு நாடுகளுடன் நேர்மையான உறவுகளை வளர்த்து வருகின்றது. அத்தோடு இந்நாடுகளுடன் இருதரப்பு இராஜதந்திர உறவுகள் பேணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு யுத்தம் வெற்றி பெற்றதன் பின்பு மின் கட்டுமானப் பணிக்கு பல நாடுகள் முன்னின்று செயற்பட்டாலும் கூட இலங்கையின் இன்றைய நிலையினைப் பொறுத்த மட்டில் வெளியுறவுக் கொள்கையானது கேள்விக் குறியான தொன்றாகவே உள்ளது. அதாவது யுத்தத்தினால் பல்வேறு விதமாக அழிவுக்குட்பட்டுள்ள இலங்கையானது யுத்தகாலத்தில் இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்களிலும், மனிதாபிமானமற்ற முறையிலும் செயற்பட்டதென உலக நாடுகளும், அமைப்புக்களும் விசனம் தெரிவித்தமையானது பல நாடுகளுடன் கசப்புறவினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் மனித உரிமை மீறல் இடம்பெறும் நாடுகளில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளமை என்ற விசனம் Channel 4இல் இலங்கை அரசாங்கப்படையின் கொடூரமான செயற்பாடுகள் என விமர்சிக்கப்பட்டமை என்பனவற்றை இதற்கு ஆதாரப்படுத்த முடியும். இன்று மத்திய கிழக்கு, ஆசிய நாடுகளுடன் இலங்கையின் வெளியுறவானது வெற்றிகரமாகச் செயற்பட்டாலும் மேற்குலகின் எதிர்ப்புக்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசினால் கொண்டுவரும் எந்தவொரு திட்டத்திலும் மேற்குலகம் எதிர்ப்புக் கருத்துக்களை தெரிவித்து வருகின்றமையை குறிப்பிட முடியும்.

அவ்வகையில் இன்று UNOவின் தருஸ்மன் அறிக்கை, இந்தியாவின் தமிழகத்தின் முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கையில் யுத்தக் குற்றம் இடம்பெற்றுள்ளதென்றும் இலங்கை ஜனாதிபதியை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்றும் கூறியுரைத்துள்ளமை, மேலும் பிரித்தானியாவின் Oxford பல்கலைக்கழகம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பேசவிடாமல் தடுத்தமை, 2011.05.26 இடம்பெறவிருக்கும் இலங்கை இங்கிலாந்து கிறிக்கட் சுற்றுக்கு இலங்கை அணி இங்கிலாந்துக்கு வருவதை அங்குள்ள தமிழ் பிரஜைகள் எதிர்த்தமை போன்றவற்றை எடுத்துக்காட்ட முடியும்.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையுடன் பல நாடுகள் நல்லுறவினை பேணிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. மத்திய கிழக்கு, ஆசிய நாடுகள் போன்றவற்றினை குறிப்பிடலாம். அவ்வாறே மேற்குலக நாடுகளுடனான உறவானது முறுகல் நிலையுடன் காணப்படுவதே இலங்கையின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு தலையீடாக அமைந்துள்ளது. இந்த முறுகல் நிலையானது எதிர்காலத்தில் இலங்கை மேற்குலகுடன் கசப்புறவினை வளர்க்கும் என்பதில் ஐயமுமில்லை.